செய்தி வெளியீடு எண்.696 நாள்.22.8.2008

# மத்திய அரசின் சுயவேலை வாய்ப்புத் திட்ட நிதியுதவி பெற ஊனமுற்றோர் செலுத்த வேண்டிய 5 சதவீதப் பங்குத் தொகையை தமிழக அரசே ஏற்கிறது! அனைத்து வகை ஊனமுற்றோருக்கும் வேலை வாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை! மாவட்டந்தோறும் தங்கும் விடுதியுடன் தொழிற்பயிற்சி நிலையங்கள்!

## ஊனமுற்றோர் மேம்பாட்டிற்காக முதலமைச்சர் கலைஞர் ஆணை !

தமிழ்நாடு உடல் ஊனமுற்றோர் சங்கங்களின் கூட்டமைப்பைச் சேர்ந்த நிர்வாகிகள் கடந்த 19.8.2008 அன்று ஊனமுற்றோர் மேம்பாட்டிற்காக நேரில் அளித்த கோரிக்கைகளைக் கனிவுடன் பரிசீலித்து, அவற்றுள் பெரும்பாலான கோரிக்கைகளை உடனடியாக ஏற்று, விரைவில் அரசாணைகள் வெளியிடப்படும் என முதலமைச்சர் கலைஞர் அறிவித்திருந்தார்.

அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து, அண்மையில் மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட பாரதப் பிரதமரின் ஊனமுற்றோருக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், மத்திய அரசின் மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் பெற்று சுய வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கு வசதியாக, அத்திட்டத்தில் ஊனமுற்றோர் செலுத்த வேண்டிய 5 சதவீதப் பங்குத் தொகையினைத் (Own Contribution) தமிழக அரசே ஏற்குமென்றும்;

பார்வையற்றோருக்கு வழங்கப்படுவது போன்றே, அனைத்து வகை ஊனமுற்றோருக்கும், வேலை வாய்ப்பற்றோர் நிவாரண உதவித் தொகை வழங்கப்படுமென்றும்;

ஊனமுற்றோர்க்கு வேலை வாய்ப்பு பெறும் தகுதியை மேம்படுத்தும் வகையில், மூன்றாண்டுகளில் மாவட்டந்தோறும் தங்கும் விடுதிகளுடன் கூடிய தொழிற் பயிற்சி நிலையங்கள் அரசு நிதியுதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் தொடங்கப்படுமென்றும் முதலமைச்சர் கலைஞர் இன்று (22.8.2008) ஆணையிட்டுள்ளார்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.